DEPOSITION OF WITNESS
Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE, NAGAPATTINAM.**

**Sessions Case No.51/2015**

Deposition of Witness for Prosecution : P.W.6

| | | | |
|---|---|---|---|
| Name | : டாக்டர் கிரே பெர்னாட் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1973 day of 13.08.2019.

முதல் விசாரணை -

நான் தற்போது தஞ்சாவூர் மருத்துவகல்லூரியில் பொது அறுவைசிகிச்சை பிரிவில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2004 ம் ஆண்டு தஞ்சை மருத்துவகல்லூரி மருத்துவமனையில் பணிபுரிந்த மருத்துவர் சந்திரசேகரன் என்பவர் காலமாகிவிட்டதால் அவர் சார்பாக தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனை டீன் அவர்களின் உத்தரவிற்கிணங்க இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனை டீன் அவர்கள் வழங்கிய உத்தரவு அ.த.சா. ஆ 3 ஆகும். கடந்த 14.08.2004ந் தேதி இரவு 10.30 மணிக்கு மருத்துவர் சந்திரசேகரன் அவர்கள் தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனையில் பணியிலிருந்தபோது இவ்வழக்கில் காயம்பட்ட கரியாப்பட்டினம் காவல் நிலைய சரகம் தென்னம்புலத்தை சேர்ந்த தமிழ்மணி என்பவர் காயங்களுடன் அவர் முன் சிகிச்சைக்கு ஆஜராகியுள்ளார். அவரை பரிசோதித்த சந்திரசேகரன் அவரை உள்நோயாளியாக சேர்த்து சிகிச்சையளித்துள்ளார். அவருக்கு வலது கை விரலில் 3 x 1 செ.மீ அளவில் ஒரு கிழிந்த காயம் காணப்பட்டது. அவருக்கு சிகிச்சை மேற்கண்டமருத்துவர் காயம் குறித்து ஊடுகதிர் படம் எடுக்க மருத்தவர் விஜயலெட்சுமி அவர்களிடம் அனுப்பிவைத்துள்ளார். நோயாளியின் கை விரலை ஊடுகதிர் படம் எடுத்த மருத்துவர் விஜயலெட்சுமி அவர்கள் நோயாளிக்கு ஏற்பட்ட காயம் சிறுகாயம் என சான்றிதழ் வழங்கிய அடிப்படையில் விபத்து பதிவேட்டு நகல் வழங்கியுள்ளார். அவர் வழங்கிய விபத்து பதிவேடு அ.த.சா. ஆ 4 ஆகும். நோயாளிக்கு ஏற்பட்ட காயம் குறித்து வழங்கிய மருத்துவ கருத்துரை அ.த.சா.ஆ 5 ஆகும். நான் அளித்த சாட்சியங்கள் அனைத்தும் மருத்துவர் சந்திரசேகரன் அளித்த கருத்துரையின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளேன்.

**குறுக்கு விசாரணை**

பரிச்சயம் இல்லாத ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.